Signature and Name of Invigilator

1. (Signature) ______________________

   (Name) ______________________

2. (Signature) ______________________

   (Name) ______________________

OMR Sheet No. : ..............................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No. ______________________

(In words)

J 2 6 1 5

# PAPER - III
# TAMIL

Time : 2½ hours] [Maximum Marks : 150

Number of Pages in this Booklet : 24 Number of Questions in this Booklet : 75

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.

   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिन्हांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

**TAMIL**

**தமிழ்**

**PAPER - III**

**தாள் - III**

**Note :** This paper contains **Seventy Five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are **compulsory**.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **எழுபத்தைந்து (75)** விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் **இரண்டு (2)** மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. அகநானூற்றைத் தொகுப்பித்தவன் :
   (1) பூரிக்கோ
   (2) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
   (3) நல்லந்துவனார்
   (4) பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி

2. முதன் முதலில் பதிப்பிக்கப் பெற்ற தமிழிலக்கியம் :
   (1) திருக்குறள் (2) புறநானூறு (3) நாலடியார் (4) குறுந்தொகை

3. மாபெரும் பத்தினி மகள் :
   (1) ஆதிரை (2) சீதை (3) கண்ணகி (4) மணிமேகலை

4. கைந்நிலையில் அமைந்த திணை :
   (1) பெருந்திணை (2) கைக்கிளை (3) ஐந்திணை (4) பாடாண்

5. தமிழ் மாறன் எனப்படுபவர் :
   (1) நம்மாழ்வார்
   (2) பெரியாழ்வார்
   (3) மதுரகவி ஆழ்வார்
   (4) தொண்டரடிப்பொடியாழ்வார்

6. கச்சிக் கலம்பக நூலாசிரியர் :
   (1) சிவப்பிரகாச சுவாமிகள்
   (2) தண்டபாணி சுவாமிகள்
   (3) புரசை சபாபதி முதலியார்
   (4) பூண்டி அரங்கநாத முதலியார்



www.examrace.com

7. சித்தர் பாடல்களை ஆராய்ந்து நூல் எழுதிய அயல் நாட்டறிஞர் :

(1) ஜார்ஜ் ஹார்ட் (2) கமில் சுவலபில்

(3) நார்மன் கட்லர் (4) அலக்சாண்டர் துபியான்ஸ்கி

8. லோபோகாரி என்ற வார இதழை வெளியிட்டவர் :

(1) பாண்டித்துரைத் தேவர் (2) வேதநாயகம் பிள்ளை

(3) வடிவேலு செட்டியார் (4) பாஸ்கரத் தொண்டைமான்

9. அகப் பொருளில் அமைந்த இங்கிதமாலையை இயற்றியவர் :

(1) வள்ளலார் (2) குமரகுருபரர்

(3) மீனாட்சி சுந்தரம்பிள்ளை (4) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

10. வலித்தல் விகாரம் அமையப் பெயர் கொண்ட காப்பியம் :

(1) சீவக சிந்தாமணி (2) யசோதர காவியம்

(3) பெருங்கதை (4) சிலப்பதிகாரம்

11. தனிச் செய்யுள் எனத் தண்டியலங்காரம் குறிப்பிடுவது :

(1) குளகம் (2) முத்தகம்

(3) தொகை நிலை (4) தொடர் நிலை

12. மறு பொருளுவமையின் வேறுபெயர் :

(1) இதர விதர உவமை (2) சமுச்சய உவமை

(3) எதிர்ப் பொருள் உவமை (4) விரியுவமை

13. ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்று தெரிவு தர வருவது :

(1) சிலேடை (2) அவநுதி

(3) விசேடம் (4) நிதரிசனம்

14. 'பாணபுரத்து வீரன்' என்ற நாடகம் எழுதியவர் :

(1) கிருஷ்ணசாமிப் பாவலர் (2) ராஜாம்பாள்

(3) பவானந்தம் பிள்ளை (4) சாமிநாத சர்மா



www.examrace.com

15. குசிகர் குட்டிக் கதைகளை எழுதியவர் :

(1) உ.வே.சு. ஐயர் (2) மாதவையா

(3) கு.ப. ராஜகோபாலன் (4) மௌனி

16. கந்தபுராணத்தில் இடம் பெற்றுள்ளவை :

(a) குளத்தில் நீருக்குள் ஈட்டிகளை நட்டு அதில் தலைகீழாக விழும் வழக்கமான கருமாரிப் பாய்தல்

(b) காற்றாடிப் பட்டம் பறக்க விடுதல்

(c) மக்கள் மகிழ்ச்சி மேலிட்டால் தம் மேலாடையை வானத்தில் வீசி எறிதல்

(d) வீடுகள் சிலவற்றில் நிலவறைகள் கட்டப்பட்டிருத்தல்

**இவற்றுள் :**

(1) (a), (b), (c) சரி (2) (b), (c), (d) சரி

(3) (a), (b), (c), (d) சரி (4) (a), (b), (d) சரி

17. மு. இராகவையங்கார் எழுதிய நூல்கள் :

(a) வஞ்சிமாநகர்

(b) சேது நாடும் தமிழும்

(c) பாரி கதை

(d) வேளிர் வரலாறு

**இவற்றுள் :**

(1) (a), (b), (c) சரி (2) (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி (4) (a), (b), (c), (d) சரி

18. யவனர்கள் கடல் வணிகத்திற்குப் பயன்படுத்திய தமிழகத் துறை முகங்கள் :

(a) முசிறி

(b) புகார்

(c) கொற்கை

(d) கபாடபுரம்

**இவற்றுள் :**

(1) (a), (c), (d) சரி (2) (b), (c), (d) சரி

(3) (a), (b), (c), (d) சரி (4) (a), (b), (c) சரி



www.examrace.com

19. பண்டைக் காலத் தமிழர் இசை நூல்கள் :

(a) பெருங்குருகு

(b) முது நாரை

(c) பெரு நாரை

(d) முது குருகு

**இவற்றுள் :**

(1) (a), (b), (c) சரி (2) (b), (d) சரி

(3) (b), (c), (d) சரி (4) (a), (b), (d) சரி

20. படிக்காசுப் புலவர் :

(a) ரகுநாத சேதுபதியின் அரசவைப்புலவர்

(b) சீதக்காதி வள்ளலைப் புகழ்ந்து பாடியவர்

(c) தொண்டை மண்டல சதகம் இயற்றியவர்

(d) உமறுப் புலவரிடம் படிக்காசு பெற்றவர்

**இவற்றுள் :**

(1) (a), (c), (d) சரி (2) (a), (b), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (b), (c), (d) சரி

21. சமரச சன்மார்க்கம் எனும் ஒருமைப் பாட்டுக் கொள்கை :

(a) திருக்குறளில் இடம் பெற்றுள்ளது

(b) திருமந்திரத்தில் இடம் பெற்றுள்ளது

(c) வள்ளலாரால் ஓரியக்கமாக வளர்க்கப்பட்டது

(d) தாயுமானவரால் விளக்கப்பட்டது.

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரி (2) (a), (c), (d) சரி

(3) (b), (c), (d) சரி (4) (a), (b), (c) சரி



www.examrace.com

22. தமிழகத்தில் 19 ஆம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள் :

(a) நட்சத்திர வராகன்

(b) பொன் மொகரா

(c) வெள்ளி டாலர்

(d) மராத்தி ரூபா

**இவற்றுள் :**

(1) (a), (b), (c) சரி (2) (a), (c), (d) சரி

(3) (b), (c), (d) சரி (4) (a), (b), (c), (d) சரி

23. சி.வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த நூல்கள் :

(a) இறையனார் அகப்பொருள்

(b) தணிகைப் புராணம்

(c) பிரயோக விவேகம்

(d) சூளாமணி

**இவற்றுள் :**

(1) (a), (b), (d) சரி (2) (b), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

24. மின் ஊடகங்கள் எனப்படுவன :

(a) தொலைக் காட்சி

(b) வானொலி

(c) கணினி

(d) திரைப்படம்

**இவற்றுள் :**

(1) (a), (b), (d) சரி (2) (b), (c), (d) சரி

(3) (a), (b), (c) சரி (4) (a), (b), (c), (d) சரி

25. பாபநாசம் சிவன் :

(a) இசைப்பாடல்களைப் பாடியவர்

(b) தமிழிசைக்கு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர்

(c) எழுபத்தைந்து ராகங்களை பயன்படுத்தியவர்

(d) பல்லவி அமைப்பில் பாடியவ்ர்

**இவற்றுள்** :

(1) (a), (b), (c) சரி (2) (a), (b), (d) சரி

(3) (b), (c), (d) சரி (4) (a), (b), (c), (d), சரி



www.examrace.com

26. **உறுதிக்கூற்று (உ)** : செந்தமிழ், கொடுந்தமிழ் என்று தமிழ் வழக்குகள் இருவகைப் படுத்தப்பட்டன.

**காரணம் (கா)** : அக்காலத்திலேயே எழுத்துத் தமிழும் பேச்சுத் தமிழும் தம்முள் வேறுபாடின்றி இருந்தன.

(1) **(உ)** சரி **(கா)** தவறு (2) **(உ)** சரி **(கா)** சரி

(3) **(உ)** தவறு **(கா)** தவறு (4) **(உ)** தவறு **(கா)** சரி

27. **உறுதிக்கூற்று (உ)** : சுவாமி வேதாச்சலம் தம் பெயரைப் பரிதிமாற் கலைஞர் எனத் தமிழாக்கிக் கொண்டார்

**காரணம் (கா)** : அவருக்குத் தனித்தமிழில் ஈடுபாடு இருந்தது

(1) **(உ)** சரி **(கா)** தவறு (2) **(உ)** தவறு **(கா)** தவறு

(3) **(உ)** சரி **(கா)** சரி (4) **(உ)** தவறு **(கா)** சரி

28. **உறுதிக்கூற்று (உ)** : பண்ணத்தி பற்றித் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**காரணம் (கா)** : இலக்கியத்தில் கொள்ளப்பட்ட இசைப்பாடல் வடிவம் அது

(1) **(உ)** தவறு **(கா)** சரி (2) **(உ)** சரி **(கா)** சரி

(3) **(உ)** சரி **(கா)** தவறு (4) **(உ)** தவறு **(கா)** தவறு

29. **உறுதிக்கூற்று (உ)** : செய்யுட்களில் விருத்தம் எனும் வகை வடமொழிப் பெயர் கொண்டது

**காரணம் (கா)** : தமிழிலேயே வளர்ந்து அமைந்த அழகான செய்யுள் வடிவம் அது.

(1) **(உ)** சரி **(கா)** தவறு (2) **(உ)** தவறு **(கா)** சரி

(3) **(உ)** சரி **(கா)** சரி (4) **(உ)** தவறு **(கா)** தவறு

30. **உறுதிக்கூற்று (உ)** : கைவல்ய நவநீதம் என்பது ஒரு மெய்யியல் இலக்கியம்

**காரணம் (கா)** : விசிட்டாத்துவைதக் கொள்கையை விளக்குவது அது

(1) **(உ)** சரி, **(கா)** தவறு (2) **(உ)** சரி **(கா)** சரி

(3) **(உ)** தவறு **(கா)** சரி (4) **(உ)** தவறு **(கா)** தவறு



www.examrace.com

31. **உறுதிக்கூற்று (உ)** : 'கல்பொரு சிறு நுரையார்' எனச் சங்கப் புலவர் ஒருவருக்குப் பெயருண்டு

**காரணம் (கா)** : மலை மீது ஏறிப் போரிட்டபோது சிறு இரத்தக்கறையை உவமையாக அமைத்து அவர் பாடியுள்ளார்.

(1) **(உ)** சரி **(கா)** சரி
(2) **(உ)** தவறு **(கா)** தவறு
(3) **(உ)** தவறு **(கா)** சரி
(4) **(உ)** சரி **(கா)** தவறு

32. **உறுதிக்கூற்று (உ)** : கலம்பகம் என்ற இலக்கிய வகை இடைக் காலத்தில் தோன்றியது

**காரணம் (கா)** : ஓர் அரசனை ஒரே வகையான யாப்பினால் பல செய்யுள் இயற்றிப் புகழ்வதை விட, பல வகையான யாப்புகளால் பல செய்யுட்கள் கலந்து எழுதுவது சுவைமிக்கது என்ற கருத்துத் தோன்றியது.

(1) **(உ)** சரி **(கா)** சரி
(2) **(உ)** சரி **(கா)** தவறு
(3) **(உ)** தவறு **(கா)** சரி
(4) **(உ)** தவறு **(கா)** தவறு

33. **உறுதிக்கூற்று (உ)** : திருவிளையாடல் புராணங்கள் பிற்காலத்தில் தோன்றக் கல்லாடம் அடிப்படையாக அமைந்தது.

**காரணம் (கா)** : அதில் உள்ள ஒவ்வொரு செய்யுளும் மதுரையில் உள்ள சிவபெருமானின் திருவிளையாடலை எடுத்துரைக்கிறது.

(1) **(உ)** சரி **(கா)** தவறு
(2) **(உ)** தவறு **(கா)** சரி
(3) **(உ)** சரி **(கா)** சரி
(4) **(உ)** தவறு **(கா)** தவறு

34. **உறுதிக்கூற்று (உ)** : தேவார காலத்திற்குப் பின்னர் பக்திப் பாடல்களுள் சிறந்தவை திருப்புகழ்ப் பாடல்களே.

**காரணம் (கா)** : வெவ்வேறு வகையான சந்தங்களும் இசை அமைப்புகளும் கொண்ட பாடல்கள் அவை.

(1) **(உ)** தவறு **(கா)** சரி
(2) **(உ)** சரி **(கா)** சரி
(3) **(உ)** சரி **(கா)** தவறு
(4) **(உ)** தவறு **(கா)** தவறு



www.examrace.com

35. **உறுதிக்கூற்று (உ)** : சீட்டுக்கவி என்று ஓரிலக்கிய வகை இருந்தது.

**காரணம் (கா)** : அவ்வப்போது கடிதங்கள் போல் பிறருக்கு எழுதி அனுப்பும் கவிதை அது

(1) **(உ)** சரி **(கா)** தவறு
(2) **(உ)** தவறு **(கா)** சரி
(3) **(உ)** சரி **(கா)** சரி
(4) **(உ)** தவறு **(கா)** தவறு

36. **உறுதிக்கூற்று (உ)** : குமரகுருபரர் இந்துஸ்தானி மொழி கற்பதற்குக் கலைமகளை வேண்டி 'சகலகலா வல்லி மாலை' பாடினார்.

**காரணம் (கா)** : அப்போது டில்லியை ஆண்ட முகலாய மன்னரிடம் பேசி அவர் உதவியைப் பெற முயன்றார்.

(1) **(உ)** சரி **(கா)** தவறு
(2) **(உ)** சரி **(கா)** சரி
(3) **(உ)** தவறு **(கா)** சரி
(4) **(உ)** தவறு **(கா)** தவறு

37. **உறுதிக்கூற்று (உ)** : பாரதியார் தன் பாடல்களுக்குரிய மெட்டைக் குறிப்பிடும் போது நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலுள்ள இன்னபாட்டின் மெட்டு என்று குறிப்பிட்டுள்ளார்

**காரணம் (கா)** : கோபால கிருட்டின பாரதியின் கீர்த்தனைகள் மக்களிடையே பெருஞ்செல்வாக்குடன் அக்காலத்தில் திகழ்ந்தது

(1) **(உ)** சரி **(கா)** தவறு
(2) **(உ)** தவறு **(கா)** சரி
(3) **(உ)** தவறு **(கா)** தவறு
(4) **(உ)** சரி **(கா)** சரி

38. **உறுதிக்கூற்று (உ)** : குசேலோ பாக்கியானம் ஒரு சார்பு நூல்

**காரணம் (கா)** : பாகவதத்திலுள்ள குசேலருடைய கதையே அதற்கு மூலம்

(1) **(உ)** தவறு **(கா)** சரி
(2) **(உ)** தவறு **(கா)** தவறு
(3) **(உ)** சரி **(கா)** தவறு
(4) **(உ)** சரி **(கா)** சரி

39. **உறுதிக்கூற்று (உ)** : வெள்ளிக் கிழமை மிகப்புனிதமான நாளாகப் போற்றப் படுகிறது.

**காரணம் (கா)** : கண்ணகி கொதித்தெழுந்து பாண்டியனிடம் நீதி கேட்டு வாதாடித் தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை நிறுவி மதுரையைத் தீக்கிரையாக்கிய நாளும் வெள்ளிக்கிழமை.

(1) **(உ)** சரி **(கா)** சரி
(2) **(உ)** தவறு **(கா)** தவறு
(3) **(உ)** சரி **(கா)** தவறு
(4) **(உ)** தவறு **(கா)** சரி



www.examrace.com

**40.** **உறுதிக்கூற்று (உ)** : கிறித்தவக் கம்பர் என்று கிருட்டிணபிள்ளை போற்றப் படுகிறார்.

**காரணம் (கா)** : வைணவரான அவர் தம் முப்பதாவது வயதில் கிறித்தவராக மாறினார்.

(1) **(உ)** தவறு **(கா)** தவறு
(2) **(உ)** தவறு **(கா)** சரி
(3) **(உ)** சரி **(கா)** தவறு
(4) **(உ)** சரி **(கா)** சரி

**41.** **நிரல்படுத்துக.**

ஆடூஉக் குணம்.

(1) அறிவு, ஓர்ப்பு, கடைப்பிடி, நிறை
(2) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி
(3) அறிவு, கடைப்பிடி, நிறை, ஓர்ப்பு
(4) அறிவு, நிறை, கடைப்பிடி, ஓர்ப்பு

**42.** **நிரல்படுத்துக.**

நான் மறை.

(1) இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம்
(2) இருக்கு, சாமம், அதர்வணம், தைத்திரியம்
(3) இருக்கு, அதர்வணம், தைத்திரியம், சாமம்
(4) இருக்கு, சாமம், தைத்திரியம், அதர்வணம்

**43.** **நிரல்படுத்துக.**

ஆச்சிரமம்.

(1) பிரமசரியம், சந்நியாசம், இல்லாச்சிரமம், வானப்பிரத்தம்
(2) பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம், இல்லாச்சிரமம்
(3) பிரமசரியம், இல்லாச்சிரமம், சந்நியாசம், வானப்பிரத்தம்
(4) பிரமசரியம், இல்லாச்சிரமம், வானப்பிரத்தம், சந்நியாசம்



www.examrace.com

**44. நிரல்படுத்துக.**

கரணம்.

(1) மனம், அகங்காரம், சித்தம், புத்தி

(2) மனம், சித்தம், புத்தி, அகங்காரம்

(3) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்

(4) மனம், புத்தி, அகங்காரம், சித்தம்

**45. நிரல்படுத்துக.**

உடம்பு.

(1) தூலம், காரணம், மகாகாரணம், சூக்குமம்

(2) தூலம், மகாகாரணம், சூக்குமம், காரணம்

(3) தூலம், சூக்குமம், மகாகாரணம், காரணம்

(4) தூலம், சூக்குமம், காரணம், மகாகாரணம்

**46. நிரல்படுத்துக.**

இழிதிணை.

(1) விலங்கு, நிலம், நீர், மரம், பறவை

(2) விலங்கு, நீர், நிலம், மரம், பறவை

(3) விலங்கு, பறவை, மரம், நிலம், நீர்

(4) விலங்கு, மரம், பறவை, நீர், நிலம்

**47. நிரல்படுத்துக.**

வரைவு கடாதல்.

(1) பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல்

(2) பொய்த்தல், கழறல், மெய்த்தல், மறுத்தல்

(3) பொய்த்தல், மெய்த்தல், கழறல், மறுத்தல்

(4) பொய்த்தல், மறுத்தல், மெய்த்தல், கழறல்

**48. நிரல்படுத்துக.**

பட்சிக்குரிய எழுத்து.

(1) அ, உ, இ, ஒ, எ

(2) அ, இ, உ, எ, ஒ

(3) அ, எ, ஒ, இ, உ

(4) அ, இ, எ, ஒ, உ



www.examrace.com

**49. நிரல்படுத்துக.**

காட்சி.

(1) ஐயம், விகற்பம், நிருவிகற்பம், திரிபு

(2) ஐயம், நிருவிகற்பம், திரிபு, விகற்பம்

(3) ஐயம், திரிபு, நிருவிகற்பம், விகற்பம்

(4) ஐயம், திரிபு, விகற்பம், நிருவிகற்பம்

**50. நிரல்படுத்துக.**

களவிற்புணர்ச்சி.

(1) காமப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கொடு தழாஅல், தோழியிற் புணர்வு.

(2) காமப்புணர்ச்சி, பாங்கொடு தழா அல், தோழியிற் புணர்வு, இடந்தலைப்பாடு.

(3) காமப்புணர்ச்சி, தோழியிற்புணர்வு, இடந்தலைப்பாடு, பாங்கொடு தழா அல்.

(4) காமப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, தோழியிற் புணர்வு, பாங்கொடு தழா அல்.

**51. நிரல்படுத்துக.**

கற்பு.

(1) மகிழ்வு, ஊடல் உணர்வு, பிரிவு, ஊடல்

(2) மகிழ்வு, பிரிவு, ஊடல், ஊடல் உணர்வு

(3) மகிழ்வு, ஊடல், ஊடல் உணர்வு, பிரிவு

(4) மகிழ்வு, ஊடல், பிரிவு, ஊடல் உணர்வு

**52. நிரல்படுத்துக.**

தீவக வகை.

(1) மாலை, ஒருபொருள், சிலேடை, விருத்தம்

(2) மாலை, சிலேடை, விருத்தம், ஒருபொருள்

(3) மாலை, விருத்தம், சிலேடை, ஒருபொருள்

(4) மாலை, விருத்தம், ஒருபொருள், சிலேடை



www.examrace.com

53. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சேரநாடு | (i) | நான்கு ஆழ்வார் |
| (b) | சோழநாடு | (ii) | நான்கு ஆழ்வார் |
| (c) | பாண்டி நாடு | (iii) | மூன்று ஆழ்வார் |
| (d) | பல்லவ நாடு | (iv) | ஓர் ஆழ்வார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iv) | (ii) | (i) | (iii) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (iv) | (i) | (iii) | (ii) |

54. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | உண்டாட்டு | (i) | உழிஞை |
| (b) | கொற்றவள்ளை | (ii) | வாகை |
| (c) | தொல்லெயிற்றிவர்தல் | (iii) | வஞ்சி |
| (d) | தாபதப் பக்கம் | (iv) | வெட்சி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iv) | (ii) | (iii) | (i) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (iv) | (iii) | (i) | (ii) |



www.examrace.com

55. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | கௌமாரம் | (i) | விநாயகர் வழிபாடு |
| (b) | சாக்தம் | (ii) | சூரிய வழிபாடு |
| (c) | காணாபத்தியம் | (iii) | சக்தி வழிபாடு |
| (d) | சௌரம் | (iv) | முருக வழிபாடு |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (i) | (iii) |
| (2) | (iv) | (iii) | (i) | (ii) |
| (3) | (iv) | (ii) | (iii) | (i) |
| (4) | (iv) | (i) | (ii) | (iii) |

56. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | குறிஞ்சி | (i) | ஆய்ச்சி |
| (b) | பாலை | (ii) | உழத்தி |
| (c) | முல்லை | (iii) | கொடிச்சி |
| (d) | மருதம் | (iv) | மறத்தி |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (i) | (ii) | (iv) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (ii) | (iv) | (i) |
| (4) | (iii) | (iv) | (i) | (ii) |

57. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | சொக்கநாதர் உலா | (i) | ஒட்டக் கூத்தர் |
| (b) | ஆளுடைய பிள்ளையார் உலா | (ii) | தத்துவராயர் |
| (c) | திருக்குற்றால நாதர் உலா | (iii) | நம்பியாண்டார் நம்பி |
| (d) | மூவருலா | (iv) | திரிகூடராசப்பக் கவிராயர் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (ii) | (i) | (iii) | (iv) |
| (3) | (ii) | (iv) | (i) | (iii) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |



www.examrace.com

58. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மன்னன் பிறப்பித்த ஆணை | (i) | நீட்டோலை |
| (b) | ஒருவருக்கு மாற்றித்தர வேண்டிய நிலப்பரப்பை வரையறை செய்வது | (ii) | அறையோலை |
| (c) | பிரம்ம தேயம் அளித்த மன்னனின் திருமுகத்தை நாட்டார்தம் தலை மீது வைத்து எழுதி வெளியிடும் அறிக்கை | (iii) | வரையோலை |
| (d) | அளவால் மிகநீண்ட எழுத்தாவணம் | (iv) | கோனோலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (iii) | (ii) | (i) |
| (2) | (iv) | (i) | (iii) | (ii) |
| (3) | (iv) | (ii) | (i) | (iii) |
| (4) | (iv) | (iii) | (i) | (ii) |

59. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | நெகிழிசையின்மை | (i) | ஒழுகிசை |
| (b) | விவரத் தொடுப்பது | (ii) | தெளிவு |
| (c) | பொருட் புலப்பாடு | (iii) | செறிவு |
| (d) | வெறுத்திசை இன்மை | (iv) | சமநிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (ii) | (i) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |



www.examrace.com

60. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆய்தம் | (i) | புலுதம் |
| (b) | அளபு | (ii) | உறுப்பு |
| (c) | மெய் | (iii) | ஆவி |
| (d) | உயிர் | (iv) | ஒற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (iv) | (ii) | (i) | (iii) |
| (4) | (iv) | (i) | (iii) | (ii) |

61. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வெள்ளை | (i) | மூன்றடிச் சிறுமை |
| (b) | வஞ்சி | (ii) | மூன்றடிச் சிறுமை |
| (c) | அகவல் | (iii) | நான்கடிச் சிறுமை |
| (d) | கலி | (iv) | ஈரடிச் சிறுமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (ii) | (i) | (iii) |
| (2) | (iv) | (i) | (iii) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |

62. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | போத்து | (i) | ஆண் எருமை |
| (b) | ஏறு | (ii) | ஆண் பன்றி |
| (c) | ஒருத்தல் | (iii) | ஆண் புல்லூறு |
| (d) | களிறு | (iv) | ஆண் சுறவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (ii) | (i) |
| (2) | (iii) | (ii) | (iv) | (i) |
| (3) | (iii) | (iv) | (i) | (ii) |
| (4) | (iii) | (i) | (iv) | (ii) |



www.examrace.com

63. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சேட்படை | (i) | தலைவி ஐயுற்றவழி, தலைவன் ஐயுறவு தீர வற்புறுத்திக் கூறல் |
| (b) | வன்புறை | (ii) | தலைவியின் குறையைத் தீர்க்க உடன் படாமல் பாங்கி மறுத்தல் |
| (c) | வன்பொறை | (iii) | இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து சென்ற தலைமகன் அடுத்த நாள் அவ்விடத்தே வந்து கூடுதல் |
| (d) | இடந்தலைப்பாடு | (iv) | தலைவனின் பிரிவினால் உளதாகிய பொறுத்தற்கரிய துயரத்தைத் தலைவி பொறுத்துக் கொள்ளுதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (iii) | (i) | (iv) |
| (4) | (ii) | (i) | (iii) | (iv) |

64. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | திருவலஞ்சுழி மும்மணிக் கோவை | (i) | இளம் பெருமானடிகள் |
| (b) | சிவ பெருமான் திருவிரட்டை மணிமாலை | (ii) | சேரமான் பெருமாள் நாயனார் |
| (c) | சிவபெருமான் திருமும்மணிக் கோவை | (iii) | நக்கீர தேவ நாயனார் |
| (d) | திருவாரூர் மும்மணிக்கோவை | (iv) | கபிலதேவ நாயனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (ii) | (i) |
| (2) | (iii) | (iv) | (i) | (ii) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (iv) | (i) |



www.examrace.com

65. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | வேதநாயக சாஸ்திரியார் | (i) | அடைக்கல நாயகி உலா |
| (b) | பிரான்சிஸ் சேவியர் | (ii) | பெத்தலேகம் குறவஞ்சி |
| (c) | ராபர்ட் டி நோபிலி | (iii) | தம்பிரான் வணக்கம் |
| (d) | வீரமா முனிவர் | (iv) | ஞான தீபிகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (ii) | (iv) | (i) | (iii) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (iii) | (i) | (iv) |

66. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அம்பணம் | (i) | நுகம் |
| (b) | அங்கணம் | (ii) | தூம்பு |
| (c) | சிறுமண்டை | (iii) | சாலகம் |
| (d) | கணைய மரம் | (iv) | அகல் வாய்க் கலம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iv) | (iii) | (i) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

67. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சிவகாமி | (i) | கருக்கு |
| (b) | திலகவதி | (ii) | இரவுச் சுடர் |
| (c) | பாமா | (iii) | ஆனந்தாயி |
| (d) | சூடாமணி | (iv) | கல்மரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (iv) | (i) | (ii) |
| (2) | (iii) | (i) | (ii) | (iv) |
| (3) | (iii) | (ii) | (iv) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |



www.examrace.com

***(68 –75) பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம்பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.***

ஐரிஸ் எழுத்தாளர் ராபர்ட் லிண்ட் எனக்குப் பிடித்த நல்ல எழுத்தாளர். சின்ன விஷயங்களைக் கூட அதி அற்புதமாகவும், நகைச்சுவையுணர்வோடும் எழுதுவதில் வல்லவர். இலக்கிய சாம்ராட்கள் சிலர் தங்கள் கதை, கவிதைகளில் செய்துள்ள வேடிக்கையான பிழைகளைச் சுட்டிக் காட்டி ஆங்கிலத்தில் மிக நளினமாய் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் லிண்ட். சேக்ஸ்பியருக்குப் பூகோள ஞானமோ வரலாற்றிவோ பூஜ்யமாம். காலகட்டம் பற்றிய அவர் கணிப்புகள் எல்லாம் மிக மட்டமாம். சார்லஸ் லாம், ஹால்லிட், ஸ்காட் போன்றவர்களின் எழுத்துக்களில் எவ்வளவோ பிழைகளாம். ஜான்சன் தம் அகராதியில் சில வார்த்தைகளுக்கு வேண்டுமென்றே தப்பான பொருள் தந்துள்ளாராம். ஒத்தெல்லோ காலத்தில் வெனிஸ் நகரத்தில் மூர் இனத்தவன் எவனும் இருந்ததில்லை என்று ஒரு புதிய செய்தியை ஒரு சாதாரண ஆராய்ச்சியாளன் கண்டு பிடித்துவிட்டால் போதும். ஒத்தெல்லோவை மூர் இனத்தவனாகக் காட்டும் சேக்ஸ்பியரின் சரித்திர ஞானத்தைச் சந்தி சிரிக்க வைத்து விடலாம் என்று அவன் பூரித்துப் போவானாம். 'டைம்' பத்திரிகையில் சேக்ஸ்பியரை ஒரு பிடி பிடித்துவிடலாம் என்று நினைப்பானாம். அந்த நாடக மேதையைக் காட்டிலும் ஓர் அங்குலம் உயர்ந்து விட்டதாய்ப் பெருமைப் படுவானாம்.

இப்படிப் பிரபல எழுத்தாளர்கள் செய்த, செய்கிற பிழைகளை அறியும் போதெல்லாம் வாசகர்கள் ஒரு புது உற்சாகம், உவகை அடைகிறார்களாம். ஆண்டுதோறும் அரசாங்கம் போடும் வரிகள் கொஞ்ச நஞ்சமா? அவற்றிற்கு ஆளாகி வருந்தும் மக்களுக்கு எழுத்தாளர்களின் பிழை, மணங்கமழும் வரிகள் வாசகங்கள்தாம் ஆறுதல் அளிக்கின்றனவாம். நகைச் சுவை உணர்வு குறைந்து வரும் இக்காலத்தில் வாய்விட்டுச் சிரிக்க வேண்டுமானால் எழுத்தில், பேச்சில், பிழைகள் பெருக வேண்டுமாம். மாபெரும் பிழைகளைப் புகழோடு தோன்றச்செய்யும் எழுத்தாளர்கள் மக்களால் கௌரவிக்கப் பட வேண்டுமாம்.

பிழைகளைப்போற்றி வரவேற்று லிண்ட் எழுதியுள்ள கட்டுரைத் தலைப்பு 'In praise of Mistakes'. எழுத்தாளன் எவ்வளவு அரும்பாடுபட்டு ஒரு காவியமோ கதையோ நடகமோ படைத்தாலும் அவனுக்கு எற்படும் இன்பம் சிற்றின்பமே. அதே நேரத்தில் அவன் படைப்பில் ஒரே ஒரு பிழையைக் கண்டு பிடித்து விட்டாலும் வாசகனுக்குக் கிடைக்கும் இன்பம் நிச்சயம் பேரின்பம் தான்.

ஒட்டக் கூத்தரின் தனிப்பாடல் ஒன்று அந்தநாள் பூம்புகார் குடிகாரர்களின் கீர்த்தி குறித்த பாடல் அது. எவ்வளவுதான் குடித்திருந்தாலும் அவர்கள் புத்தி பேதலிக்க மாட்டார்களாம். எதைக் கேட்டாலும் தெளிவாகச் சொல்வார்களாம். ஆனானப்பட்ட மகாபாரதக் கதையைக் கூட அச்சுப் பிசகாமல் சொல்வார்களாம். ஒருவன் 'மகாபாரதக் கதையைச் சொல்லவா' என்று கேட்கிறான். 'சரிசொல்' என்றால் உள்ளபடி சொல்லவா என்று கேட்கிறான். அரைப்படி ஒருபடி என்று உள்ளே ஊற்றியிருக்கும் அவன்



www.examrace.com

ஆசையைக் கெடுப்பானேன் என்று உள்ளபடி சொல் என்றால் ‘வாலி துரோபதையை மூக்கரிந்தது அல்லவா ‘மகாபாரதம்’ என்று முடிக்கிறான். இராமாயண மகாபாரதங்களுக்கிடையே என்னமாய்க் காப்பிய ஒருமைப்பாட்டை (epic integration) உண்டாக்க முயல்கிறான். ‘திருவாளன் உள்ளபடி’யின் உளறலில் துள்ளி விளையாடும் பிழைகளைத் தமிழர்கள் எவ்வளவு காலமாய் அனுபவித்திருக்கிறார்கள்.

‘சீதைக்கு ராமன் சித்தப்பா’ என்று எவன் என்றைக்குச் சொன்னான் என்று தெரியவில்லை. யார் யாரெல்லாம் அதை ரேடியாகக் கேட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள் என்றும் தெரியவில்லை. இவர்களிடம் நெடுநல் வாடை, நெடுநாள் வாடை, நெடுநெல் வடை, நெருநாள் வடை என்றெல்லாம் புதுப்புதுக் கோலம் பூண்டு நிற்கும்.

என் பையன் சுடர் இரண்டாம் வகுப்புப் படிக்கும் போது சிலேட்டில் ‘நெண்டி’ என்று எழுதியிருந்தான், ‘பொறுப்புள்ள அப்பா’ என்று என் மனைவி என்னை மெச்ச வேண்டும் என்று பையனைப் பக்கத்தில் அமர்த்தி ‘நெண்டி அல்ல’, ‘நொண்டி’ என்று எழுதவேண்டும், ‘காலைக் காணோமே’ என்று கேட்டேன். உடனே அவன் ‘நொண்டிக்கு எப்படி அப்பா கால் இருக்கும்’ என்று கேட்டான். ஒரு நிமிடம் நான் ஆச்சரியப் பட்டுப்போனேன்.

என் இன்னொரு அனுபவம், இளமைக் கால அனுபவம். எட்டாம் வகுப்புப் படிக்கும் போது நடந்த சம்பவம். நாடகம் ஒன்றுக்குக் கதை வசனம் பாடல்கள் எழுதி ஒரு சிறு பாத்திரத்தில் நடித்து இயக்கவும் செய்தேன். நாடகத்தின் பெயர் ‘தலையாலங் கானம்’. பாண்டியன் நெடுஞ்செழியனாகப் பன்னிரண்டு வயதுள்ள என் நண்பன் ஒருவன் நன்றாக நடித்தான். போருக்குப் புறப்படும் காட்சி, தாயிடம் வீர வசனம் பேசி விடை பெற வேண்டும் பாண்டியன் ஒத்திகையில் அந்த இளஞ்சிங்கம் பகைவர்களின் தலைகளைப் பந்தாடி விடுவேன். குடலை உருவி மாலையாகச் சூடி வருவேன். குருதியில் குளித்து வெற்றி கீதம் பாடி வருவேன், ‘வடை கொடு’ தாயே என்று முழங்கினான். சக மாணவ நடிகர்கள் எல்லாம் ‘விடை கொடு’ தாயே என்பதற்குப் பதிலாக ‘வடை கொடு’ தாயே என்று பேசியதைக் கேட்டுக் கொல்லென்று சிரித்தார்கள்.

பிழைபடப் பேசும் பாத்திரம் ஒன்றை உருவாக்குவது அவ்வளவு சாதாரணமான காரியமல்ல. ஷெரிடன் நாடகம் ஒன்றில் ‘மலப்பிராப்’ என்று ஒரு சீமாட்டி வருகிறார். இவர் ‘என் காதலன்’ என்று சொல்ல வேண்டியிருந்தால், ‘இவள் என் காதலன்’ என்று சொல்வார்.

I have two windows in my room என்பதை I have two widows in my room என்றானாம் ஒருவன். அந்த மாதிரி அந்த சீமாட்டி எதையும் மாற்றிப் பிழைப்படப் பேசுவார். அந்தச் சீமாட்டி தம் நினைவாக ‘மலப்பிராபிசம்’ (Malapropism) என்று ஒரு வார்த்தையை ஆங்கில அகராதிக்கு வழங்கியிருக்கிறார். காப்பிடலிசம், சோசலிம், அண்ணாயிசம் போல அந்தச் சீமாட்டி செய்த பிழைகள் உலகத்துக்கு ஒரு புது இசத்தைத் தந்திருக்கிறதே..... அவரைக் கோயில் கட்டிக் கும்பிடத்தான் வேண்டும்.



www.examrace.com

ஒரு முறை ஐன்ஸ்டினிடம் 'உங்களுடைய சார்பியல் கோட்பாட்டை (Theory of Relativity) எளிமையாக விளக்குங்கள் என்று கேட்டாராம் ஒரு செய்தியாளர்.' ஒருவன் ஓர் அடுப்பின்மேல் உட்கார்ந்திருக்கிறான் என்று வைத்துக்கொள், அவனுக்கு ஒரு நிமிடம் ஒரு யுகமாகத் தோன்றும்.

ஒருவன் தன் காதலியிடம் பேசிக் கொண்டிருக்கிறான் என்று வைத்துக் கொள். அவனக்கு ஒரு நாள் ஒரு நிமிடமாகத் தோன்றும். சோதனைக்கு வேண்டுமானால் முன்னதை நீ செய்து பார். பின்னதை நான் செய்கிறேன் என்றாராம் சிரித்துக் கொண்டே. பிழைகளும் அப்படித்தான். ஒருவர் செய்து அதை இன்னொருவர் சுட்டிக் காட்டினால் அதில் உள்ள இன்பம் சாமான்யமானதல்ல; ஓர் அறிவியல் உண்மையைக் கண்டு பிடித்த போது குளியல் தொட்டியிலிருந்து நிர்வாணமாக 'யுரேகா' என்று கத்திக் கொண்டு ஆர்க்கிமிடீஸ் ஓடினாராமே அப்போது அவருக்கு உண்டான இன்பத்துக்குச் சற்றும் குறைந்ததல்ல அது...

வெள்ளைத் தாமரையில் வெகுகாலமாய் வீற்றிருக்கும் கலைமகளே... உனக்கொரு விண்ணப்பம்.... எதை எதையோ கலை என்று அறுபத்து நான்கு கலைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறாய்.... எல்லோருக்கும் இலவசமாய்ப் பேரின்பம் வழங்கும் பிழை ஓர் உன்னதமான கலை... அதை அறுபத்தைந்தாவது கலையாக ஏற்றுக்கொள்..

68. **உறுதிக்கூற்று (உ)** : வாலி துரோபதையை மூக்கரிந்தது மகாபாரதம் என்றான் ஒருவன்.

**காரணம் (கா)** : இராமாயண மகாபாரதங்களுக்கிடையே காப்பிய ஒருமைப் பாட்டை உண்டாக்க முயன்றான் அவன்.

(1) (**உ**) தவறு, (**கா**) தவறு
(2) (**உ**) சரி, (**கா**) தவறு
(3) (**உ**) சரி, (**கா**) சரி
(4) (**உ**) தவறு, (**கா**) சரி

69. **நிரல்படுத்துக.**

(1) மலப்பிராபிசம், காப்பிடலிசம், சோசலிசம் அண்ணாயிசம்.

(2) மலப்பிராபிசம், காப்பிடலிசம், அண்ணாயிசம் சோசலிசம்.

(3) மலப்பிராபிசம், சோசலசம், அண்ணாயிசம், காப்பிடலிசம்.

(4) மலப்பிராபிசம், அண்ணாயிசம், காப்பிடலிசம். சோசலிசம்.



www.examrace.com

70. நிரல்படுத்துக.

(1) மாலை, வானம், ஆம்பல், வெண்ணிலா

(2) மாலை, வெண்ணிலா, வானம், ஆம்பல்

(3) மாலை, வெண்ணிலா, ஆம்பல், வானம்

(4) மாலை, வானம், வெண்ணிலா, ஆம்பல்

71. ‘பிழைகளைப் புகழ்ந்து’ என்னும் பொருளில் ஆங்கிலக் கட்டுரை எழுதியவர் :

(1) சேக்ஸ்பியர் (2) ஸ்காட் (3) ஜான்சன் (4) ராபர்ட் லிண்ட்

72. சேக்ஸ்பியர்.

(a) வரலாற்றறிவு மிக்கவர்

(b) கால கட்டம் பற்றிய மட்டமான கணிப்பாளர்

(c) பூகோள அறிவு இல்லாதவர்

(d) சந்தி சிரிக்கும் சரித்திர குணம் உடையவர்

இவற்றுள் :

(1) (b), (c), (d) சரி

(2) (a), (b), (c) சரி

(3) (a), (b), (d) சரி

(4) (a), (b), (c), (d) சரி

73. பொருத்துக.

(a) ஐன்ஸ்டின் (i) அகராதி

(b) மலப்பிராபிசம் (ii) சார்பியல் கோட்பாடு

(c) லிண்ட் (iii) ஷெரிடன் நாடக மாந்தர்

(d) ஜான்சன் (iv) ஐரீஸ் எழுத்தாளர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (iv) | (i) |
| (2) | (ii) | (i) | (iii) | (iv) |
| (3) | (ii) | (iv) | (i) | (iii) |
| (4) | (ii) | (iv) | (iii) | (i) |



www.examrace.com

74. **உறுதிக்கூற்று (உ)** : ஒத்தெல்லோவை மூர் இனத்தவன் என்னும் ஆசிரியரின் கருத்து அபத்தமானது.

**காரணம் (கா)** : ஒத்தெல்லோ காலத்தில் அவ்வினத்தில் எவனும் இல்லை.

(1) (**உ**) சரி, (**கா**) சரியன்று  (2) (**உ**) சரியன்று, (**கா**) சரி

(3) (**உ**), (**கா**) இரண்டும் சரி  (4) (**உ**), (**கா**) இரண்டும் தவறு

75. **பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| (a) | நொண்டி | (i) | யாரோ |
| (b) | வடை | (ii) | சுடர் |
| (c) | வாலி துரோபதை மூக்கரிந்தது | (iii) | தலையானங்கானம் நாடகப் பாத்திரம் |
| (d) | சீதைக்கு ராமன் சித்தப்பா | (iv) | திருவாளன் உள்ளபடி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (iii) | (iv) | (i) |
| (3) | (ii) | (i) | (iii) | (iv) |
| (4) | (ii) | (iv) | (i) | (iii) |

- o 0 o -



www.examrace.com

**Space For Rough Work**

ExamRace



www.examrace.com